பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
04 11 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- அஸ்ஸாம் மக்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அஸ்ஸாம் மொழி வாரத்தை கொண்டாடி மகிழ வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
- 2030-ஆம் ஆண்டுக்குள் 90 கிகாவாட் சூரிய சக்தி மின் உற்பத்தியை எட்டுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லேண்ட் மாகாணம் பிரிஸ்பேன் நகரில் இந்திய தூதரகத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெயசங்கல் இன்று திறந்து வைத்தார்.
- உத்தராகண்ட் மாநிலம் அல்மோரா மாவட்டத்தில் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர்.
- உலக டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் ஒற்றையர் மற்றும் கலப்பு இரட்டையர் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அஸ்ஸாமிய மொழிவார கொண்டாட்டத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி அஸ்ஸாம் மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று தொடங்கி வரும் ஒன்பதாம் தேதி வரை நடைபெறும் அஸ்ஸாம் மொழிவார விழா அம்மாநில மக்களின் மகிழ்ச்சியையும், எழுச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மாவுக்கு பிரதமர் அனுப்பி உள்ள வாழ்த்துச் செய்தியில், அஸ்ஸாமிய மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மக்கள் பெருமிதத்தோடு இந்நாளை கொண்டாடி மகிழ வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அஸ்ஸாமிய மொழியின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அதிக அளவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமென்றும், அண்டை மாநிலத்தை சேர்ந்தவர்களுக்கும்

அழைப்பு விடுத்து இந்நாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்றும் திரு நரேந்திரமாடி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

2030-ஆம் ஆண்டுக்குள் 90 கிகாவாட் சூரிய சக்தி மின் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று ஏழாவது சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், 50 சூரிய மின் உற்பத்தி பூங்காக்களை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகக் கூறினார்.

இந்த பூங்காக்கள் மூலம் 37 புள்ளி ஐந்து கிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்னும் ஆறு ஆண்டுகளுக்குள் 500 கிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்வதற்கான இலக்கு எட்டப்பட்டு விடும் என்றும் திரு பிரல்ஹத் ஜோஷி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் உள்ள பிரிஸ்பேன் நகரில் இந்திய தூதரகத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெயசங்கல் இன்று முறைப்படி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் திரு ஜெய்சங்கர் வெளியிட்டள்ள சமூக வலைதளப் பதிவில், பிரிஸ்பேன் தூதரகம் இந்தியாவுக்கும் - குயின்ஸ்லேண்டுக்கும் இடையேயான வர்த்தகம் மற்றும் உயர்கல்வி படிப்புகளுக்கான தொடர்பை மேம்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இம்மாகாணத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கும் மிகவும் பயனுள்ள வகையில் இந்த தூதரகம் அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குயின்ஸ்லேண்ட் ஆளுநர் டாக்டர் **Jeannette young**-மையையும் சந்தித்து திரு ஜெய்சங்கர் பேசினார்.

இந்தியாவுக்கும் - குயின்ஸ்லேண்டுக்கும் இடையேயான பொருளாதார வர்த்தக மற்றும் முதலீட்டுக்கான ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

[]<<<>>>[]

ஆப்ரிக்க நாடான ஜாம்பியாவுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் இன்று தமது நான்கு நாள் பயணத்தை தொடங்கியுள்ளார்.

மொலம்போ நகரில் இந்திய - ஜாம்பியா நிரந்தர கூட்டுக்கமிஷனின் ஆறாவது கூட்டத்தில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார, வர்த்தக மற்றும் மக்களுக்கு இடையேயான தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு கூட்டுக்கமிஷன் கூட்டம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக 2005-ஆம் ஆண்டு புதுதில்லியில் ஐந்தாவது கூட்டுக் கமிஷனின் கூட்டம் நடைபெற்றது.

திரு கீர்த்தி வர்தன் சிங் இந்த பயணத்தின் போது ஜாம்பிய அரசின் முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.

மேலும் இந்தியாவில் நேரடி அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், ஜாம்பியாவில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறிதத்தும், தொழிலதிபர்களுடன் நடைபெறும் வட்டமேசை மாநாட்டிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்திய அமைச்சரின் ஜாம்பிய பயணம் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை புதுப்பிப்பதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது.

[]<<<>>>[]

ஹரியானாவில் விவசாயக் கழிவுகளை தீயிட்டு எரிக்க வேண்டாம் என்று அம்மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. ஷியாம்சிங் ரானா விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒருபக்கம் பயிர்க்கழிவுகளை தீயிட்டு எரிப்பதை தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், மற்றொரு பக்கம் பயிர்க் கழிவுகளை பல்வேறு முறைகளில் மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கரும்பு விவசாய கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கை எரிவாயு தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஷியாம்சிங் ரானா கூறியுள்ளார்,

**[]<<<>>>[]**

மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள இன்று கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் பரிசீலனையின்போது மொத்தம் உள்ள 288 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் ஏழாயிரத்து 994 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் இம்மாதம் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

உத்தராகண்ட் மாநிலம் அல்மோரா மாவட்டத்தில் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விழுந்து நேரிட்ட விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர்.

**Garhwal** என்ற இடத்திலிருந்து **Kumaon** என்ற இடத்திற்கு இந்த பேருந்து சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நேரிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பேருந்தில் 40 பயணிகள் பயணித்ததாகவும், 200 மீட்டர் பள்ளத்தில் இந்த பேருந்து விழுந்திருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

காவல்துறையினரும், மாநில பேரிடர் மீட்புப் படையினரும் மீட்புப் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்,

காயமடைந்தவர்களை ஹெலிகாப்டர் மூலம் உடனடியாக மருத்துவமனைகளுக்குச் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கார் சிங் தாமி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் 47-வது அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறுவதையொட்டி அதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.

குடியரசுக் கட்சி சார்பில் திரு டொனால்டு ட்டிரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் திருமதி கமாலா ஹரிஸூம் களத்தில் உள்ளனர்.

நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று இரு தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி மற்றும் வெலிங்டன் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக ஆங்காங்கே மரங்கள் விழுந்துள்ளதால் சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மலைரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) -40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே மற்றும் கர்நாடகத்தின் தெற்கு உள்பகுதியில் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபாரில் நாளை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை அறிக்கை கூறுகிறது.

தலைநகர் தில்லியில் நள்ளிரவு முதல் கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது.

காலை நேரங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கடுமையான பனிமூட்டம் நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்திரபிரதேசத்தின் வடகிழக்கு பகுதிகளில் மிதமானது முதல் அடர்ந்த பனிமூட்டம் காலை நேரத்தில் நிலவக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

உலக டேபிள் டென்னிஸ் **Feeder Caracas** போட்டியில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் ஒற்றையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

வெனிசுலாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் மூன்று — பூஜ்சியம் என்ற செட் கணக்கில் பிரான்சின் **Joe sey fried** ம-யை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஹர்மீத் தேசாய் - கிருத்திவிகா ராய் இணை — கியூபா இணையை மூன்றுக்கு - இரண்டு என்ற செட் கணக்கில் வென்று பட்டத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

இன்று நடைபெறும் முதலாவது லீக் போட்டியில் உத்தரப்பிரதேசம் அணி - கேரளா அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் கர்நாடக - உத்தராகண்ட் அணிகள் மோதுகின்றன.

வரும் 16-ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் 31 அணிகள் பங்கேற்கின்றன.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை - ஜாம்ஷெட்பூர் அணிகள் மோதுகின்றன.

ஜார்க்கண்ட்டில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**